# 12 - STD இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

மொத்த பக்கங்கள் : 6

நேரம் : 3.00 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 90

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக 20 x 1 = 20

1. உரிமையாளரின் சொத்துக்கள் ரூ. 5,00,000 மற்றும் பொறுப்புகள் ரூ. 2,00,000 எனில் அவருடைய முதல்தொகை
அ) ₹7,00,000 ஆ) ₹5,00,000 இ) ₹3,00,000 ஈ) ₹2,00,000

2. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 ன் படி வழங்கப்படும் வட்டி விகிதம்
அ) ஆண்டுக்கு 5% ஆ) ஆண்டுக்கு 8% இ) ஆண்டுக்கு 6% ஈ) ஆண்டுக்கு 12%

3. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
அ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
இ) நற்பெயரினை வாங்க முடியாது ஈ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

4. A,B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர் தற்போது 'A' விலகுகிறார். B மற்றும் C யின் புதிய இலாப பகிர்வு விகிதம்
அ) 2:3 ஆ) 4:2 இ) 2:1 ஈ) 3:2

5. ஒரு பொது அளவு இருப்புநிலைக் குறிப்பில் நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 85 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் எவ்வளவு? அ) 15 ஆ) 185 இ) 100 ஈ) 115

6. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
(அ) 5.5 மாதங்கள் (ஆ) 6 மாதங்கள் (இ) 12 மாதங்கள் (ஈ) 6.5 மாதங்கள்

7. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
(அ) உயர் இலாபம் =மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஆ) உயர் இலாபம் கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் X கொள்முதல் ஆண்டுகள்

8. மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு
(அ) சொத்து க/கு (ஆ) பெயரளவு க/கு (இ) ஆள்சார் க/கு (ஈ) ஆள்சாரா க/கு

9. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்
(அ) மறுமதிப்பீட்டு இலாபம் (ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
(இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் (ஈ) முதலீட்டு மாறுபடும்நிதி

10. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
(அ) 4:3 ஆ) 3 : 4 (இ) 2:1 ஈ) 1 : 2

11. ஒரு கூட்டாளி விலகலின்போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
(அ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு
(ஆ) பகிர்ந்து தராஇலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு
(இ) நற்பெயரைசரிக்கட்டுவதற்கு (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

12. முன்னுரிமைப் பங்கு என்பது
(i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
(ii) கலைப்பின் போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
(அ) (i) மட்டும் சரியானது (ஆ) (ii) மட்டும் சரியானது
(இ) (i) மற்றும் (ii) சரியானது (ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

13. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
(அ) பத்திர முனைமக் கணக்கு (ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
(இ) பங்குமுதல் கணக்கு (ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

14. இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய தகவல்களை வழங்குகிறது.
(அ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான (ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
(இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான (ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய

15. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை 1,25,000 லிருந்து 1,50,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?
(அ) +20% (ஆ) +120% (இ) - 120% (ஈ) -20%

16. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துக்கள் அழைக்கப்படுவது.
(அ) காப்புகள் (ஆ) புலனாகும் சொத்துக்கள் (இ) நிதி (ஈ) விரைவு சொத்துக்கள்

17. பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம்
(அ) உரிமையாளர் விகிதம் (ஆ) முதல் உந்துதிறன் விகிதம்
இ) புற அக பொறுப்பு விகிதம் (ஈ) நடப்பு விகிதம்

18. F11 எனும் பயன்பாடு
(அ) நிறுவனப் பண்பு கூறுகள் (ஆ) கணக்கியல் சான்றாவணங்கள்
(இ) நிறுவன கட்டமைப்பு (ஈ) இவைகளில் எதுவும் இல்லை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

19. Tally-ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
(அ) அனாமத்து க/கு (ஆ) கொடுபட வேண்டிய செலவு க/கு
(இ) விற்பனைக/கு (ஈ) முதலீடுகள்க/கு
20. Tally-யின் நுழைவாயிலிலிருந்து இருப்பாய்வை பார்வையிட எந்த விருப்பத் தேர்வு பயன்படும்?
(அ) Gateway of Tally -> Reports -> Trial Balance
(ஆ) Gateway of Tally -> Trial Balance
(இ) Gateway of Tally -> Report -> Display - > Trial Balance
(ஈ) இவைகளில் ஏதுவுமில்லை

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 30 கட்டாயம்) 7 x 2= 14**

21. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
22. இலாப நோக்கற்ற அமைப்பின் பொருள் தரவும்?
23. மன்னன் மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் 1,50,000 மற்றும் ரமேஷ் 1,00,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ₹25,000 மற்றும் ₹20,000 என வரவிருப்பைக் காட்டியது. 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு, அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
24. சராசரி இலாபம் ₹15,000 ஆக இருக்கும் போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
25. தியாக விகிதம் என்றால் என்ன ?
26. கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்?

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 5,00,000 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | 8,50,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 1,20,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 70,000 |

27. அப்துல் வரையறு நிறுமம் ₹10 மதிப்புள்ள 50,000 பங்குகளை ₹2 வெளியிட்டது. அனைத்துத் தொகையும், விண்ணப்பத்துடன் செலுத்துமாறு பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப்பதிவினைத் தரவும்.
(i) பங்குகளைமுகமதிப்பில் வெளியிட்டால்
(ii) பங்கொன்று 2 முனைமத்தில் வெளியிட்டால்
28. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.
29. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புச் பொறுப்புகள் ₹2,40,00 மொத்த நடப்புச் சொத்துக்கள் ₹4,50,000; சரக்கிருப்பு ₹70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்₹ 20,000
30. கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு
அ) ஈட்டிய இலாபம் 2016 - ₹90,000
(ஆ) 2016-ஆம் ஆண்டில் இலாபத்தில் அசாதாரண நட்டம் ₹30,000 சேர்ந்துள்ளது.
சரிகட்டப்பட்ட இலாபம் கணக்கிடுக.

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 40 கட்டாயம்) 7 x 3= 21**

31. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.(ஏதேனும் மூன்று)
32. 2019 மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு:

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 1,20,000 |
| அறைகலன் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டடம் | 3,00,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 3,20,000 | சரக்கிருப்பு | 2,20,000 |

33. சிபி மற்றும் மனோஜ் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள் சிபி கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். மனோஜ், கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் 60,000. சிபி மற்றும் மனோஜின் கழிவினைக் கண்டுபிடிக்கவும். மேலும் இலாபப் பகிர்வினையும் கணக்கிடவும்.
34. Tally ERP 9 - ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள்?



22 2019 மார்ச் 31 அன்று இருநிலை அறிக்கை

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

35. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | தொகை | நிறைகள் |
|---|---|---|
| 2015 | 10,000 | 1 |
| 2016 | 12,000 | 2 |
| 2017 | 16,000 | 3 |
| 2018 | 18,000 | 4 |

36. பிரேமா மற்றும் சந்திரா 5:3 விகிதத்தில் இலாபநட்டத்தைப் பகிர்ந்து வருகின்றனர். ஹேமா என்பவர் கூட்டாளியாக சேருகிறார். பிரேமாதன் பங்கில் 1/8 பாகமும், சந்திராதன் பங்கில் 1/8 பாகமும் ஹேமாவிற்காக தியாகம் செய்கின்றனர். புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும் மற்றும் தியாக விகிதத்தையும் கணக்கிடவும்.

37. கூட்டாளி விலகலின் போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.

38. சம்பத் நிறுமம் 25,000 பங்குகளை, பங்கு ஒன்று ₹10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹3, ஒதுக்கீட்டின் போது ₹4. பொதுமக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

39. மீனா நிறுமத்தின் 2018, மார்ச்31 ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும் விவரம்

| விவரம் | 2018, மார்ச் 31 ₹ |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| பங்குதாரர் நிதி | 2,00,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 1,60,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 40,000 |
| மொத்தம் | 4,00,000 |
| II. சொத்துக்கள் | |
| நீண்ட காலச் சொத்துக்கள் | 3,00,000 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,00,000 |
| மொத்தம் | 4,00,000 |

40. கீழ்கண்ட தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தைக் கணக்கிடவும்

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய கால முதலீடுகள் | 40,000 | நிலைச் சொத்துக்கள் | 5,00,000 |
| சரக்கிருப்பு | 2,00,000 | வணிகத்தின் கடனீந்தோர் | 80,000 |
| வணிகத்தின் கடனாளிகள் | 1,20,000 | செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 50,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 80,000 | கொடுபட வேண்டிய செலவுகள் | 20,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 10,000 | நீண்டகால பொறுப்புகள் | 3,00,000 |

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7 x 5= 35**

41. அ) 2018 ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. 2019 மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹30,000 எடுத்துக்கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹40,000 அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**(அல்லது)**

ஆ) பின்வரும் நடவடிக்கைகளை Tally-ல் பதிவு செய்யவும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
CamScanner

(1) ₹4,00,000 முதலுடன் தேவி தொழில் தொடங்கினார்
(2) இந்தியன் வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு ₹60,000 செலுத்தியது.
(3) ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ₹15,000
(4) சுமதியிடம் இருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ₹50,000
(5) ரொக்க விற்பனை மேற்கொண்டது ₹10,000

42. (அ)கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து குறிஞ்சி விளையாட்டு மன்றத்தின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கைரொக்கம் (1.1.2018) | 4,000 | அச்சுக்கட்டணம் செலுத்தியது | 2,500 |
| சம்பளம் கொடுத்தது | 3,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 1,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது. | 10,000 | தொடர் விளையாட்டுப் போட்டி வரவுகள் | 14,000 |
| சந்தா பெற்றது | 15,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 10,500 |
| வாடகை பெற்றது | 2,000 | முதலீடுகள் வாங்கியது | 25,000 |

(அல்லது)

ஆ) ஜோன்ஸ் நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கையிலிருந்து
(i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம்
(iii) இயக்க அடக்க விலை கணக்கிடவும் (V) இயக்க இலாப விகிதம்

ஜோன்ஸ் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை

| விவரம் | ₹ |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II. இதர வருமானம் : | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருவாய் | 4,000 |
| III மொத்த வருவாய் (I +II) | 4,04,000 |
| IV. செலவுகள் : | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் ( நிர்வாக மற்றும் விற்பனை) | 60,000 |
| மொத்த செலவுகள் | 3,24,000 |
| V. அவ்வாண்டின் இலாபம் | 80,000 |

43. (அ) கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்
(i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
(ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்
(iii) ஒவ்வொரு இறுதியில் எடுத்திருந்தால்

(அல்லது)

ஆ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
(I) 2016: ₹25,000; 2017: ₹23,000 மற்றும் :2018 : ₹26,000
(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹2,500 சேர்ந்துள்ளது.
(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் 3,500 குறைக்கப்பட்டது.
(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹250 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்

44. அ) கீழ்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கைரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ₹ 4,400) | | கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

(அல்லது)

ஆ) கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்

| விவரம் | 2017, மார்ச் 31 ₹ | 2018, மார்ச் 31 ₹ |
|---|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| (அ) பங்குமுதல் | 3,00,000 | 3,60,000 |
| (ஆ) காப்பு மிகுதியும் | 50,000 | 50,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | |
| நீண்ட காலக் கடன்கள் | 50,000 | 40,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்தவேண்டியவைகள் | 20,000 | 12,000 |
| மொத்தம் | 4,20,000 | 4,62,000 |
| **II. சொத்துகள்** | | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | | |
| (அ) நிலைச் சொத்துகள் | 2,50,000 | 2,90,000 |
| (ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 40,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 80,000 | 1,00,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 40,000 | 32,000 |
| மொத்தம் | 4,20,000 | 4,62,000 |

45. அ) (1) சாய் மற்றும் சங்கர் இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அந்நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் க/கு | | | கட்டிடம் | | 34,000 |
| சாய் | 48,000 | | அறைகலன் | | 6,000 |
| சங்கர் | 40,000 | 88,000 | முதலீடுகள் | | 20,000 |
| கொடுபட வேண்டிய கூலி | | 37,000 | கடனாளி | 40,000 | |
| புற்பல கடனீந்தோர் | | 8,000 | – ஐயக்கடன் | 3,000 | 37,000 |
| | | | பெ.மா.சீ | | 12,000 |
| | | | சரக்கிருப்பு | | 16,000 |
| | | | வங்கி | | 8,000 |
| | | 1,33,000 | | | 1,33,000 |

2017, டிசம்பர் 31 இல் சண்முகம் என்பவர் 1/4 இலாபப்பகிர்வு விகிதத்தில் கூட்டாண்மையில் சேருகிறார். அவர் பின்வரும் சரிகட்டுதலுக்குட்பட்டு ₹12,000 முதலாக கொண்டு வருகிறார்.
(அ) அறைகலன் ₹5,000 மற்றும் கட்டடம் ₹50,000 ஆகவும் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹5,500 ஆக உயர்த்த வேண்டும்.
(இ) பதிவுறாத ₹6,000 மதிப்புள்ள முதலீடு கணக்கில் கொண்டு வரப்படவேண்டும்.
(ஈ) பதிவுறாத ₹2,500 மதிப்புள்ள பொறுப்பு பதிவு செய்யப்படவேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின் உள்ள முதல் கணக்கினையும் பதிவு செய்யவும். (அல்லது)





CamScanner

ஆ) சந்துரு, விஷால் மற்றும் ரமணன் என்ற கூட்டாளிகள் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் இலாபம் மற்றும் நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | அறைகலன் | | 60,000 |
| சந்துரு | 60,000 | | இயந்திரம் | | 1,20,000 |
| விஷால் | 70,000 | | பற்பல கடனாளிகள் | 33,000 | |
| ரமணன் | 70,000 | 2,00,000 | கழிக்க: ஐயக்கடன் | | |
| செலுத்தற்குரிய | | | ஒதுக்கு | 3,000 | 30,000 |
| மாற்றுச்சீட்டு | | 80,000 | செலுத்தற்குரிய | | |
| | | | மாற்றுச்சீட்டு | | 50,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 20,000 |
| | | 2,80,000 | | | 2,80,000 |

ரமணன் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 2019, மார்ச் 31 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

(i) இயந்திரம் ₹1,50,000 என மதிப்பிடப்பட்டது.

(ii) அறைகலன் மதிப்பில் ₹10,000 குறைக்கப்பட்டது.

(iii) ஐயக்கடன் ஒதுக்கு ₹5,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டும்.

(iv) ஏடுகளில் பதியப் பெறாத முதலீடுகள் ₹30,000 தற்போது பதியப்பட வேண்டும். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயார் செய்யவும்.

46. (அ) விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ₹10 வீதம் 20,000 பங்குகளை பங்கொன்றிற்கு ₹2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.

₹2 விண்ணப்பத்தின் மீதும்

₹5 (முனைமம் உள்பட) ஒதுக்கீட்டின் மீதும்

₹5 முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீதும் மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். **(அல்லது)**

(ஆ) பரணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்

| விவரம் | 2016 – 17 ₹ | 2017 –18 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 30% | 30% |

47. அ) கமல் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை. பங்கொன்று ₹10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹2 ஒதுக்கீட்டின் போது ₹4 முதலாவது அழைப்பின்போது ₹2 மற்றும் இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ₹2 செலுத்தப்பட வேண்டும் அனைத்து பங்குகளும் ஒப்படைக்கப்பட்டன மற்றும் தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்

**(அல்லது)**

ஆ) மகேஷ் நிறுமத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| விவரம் | ₹ |
|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. பங்குதாரர் நிதி | |
| நேர்மைப் பங்குமுதல் | 20,00,000 |
| 2. நீண்டகால பொறுப்புகள் | |
| நீண்டகாலக் கடன்கள் | 5,00,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) குறுகிய காலக் கடன்கள் | 1,70,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 2,50,000 |
| (இ) இதர நடப்புப் பொறுப்புகள் | |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 30,000 |
| (ஈ) குறுகியகால ஒதுக்குகள் | 50,000 |
| மொத்தம் | 30,00,000 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner

| | |
|---|---|
| சொத்துகள் | |
| 1 நீண்டகால சொத்துகள் | |
| (அ) நிலைச் சொத்துகள் | |
| பொறியமைவு சொத்துகள் | 15,00,000 |
| 2 நடப்புச் சொத்துகள் | |
| (அ) சரக்கிருப்பு | 4,50,000 |
| (ஆ) வணிகம் மூலம் பெறவேண்டியவை | 7,00,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவை | 3,00,000 |
| (ஈ) இதர நடப்புச் சொத்துகள் | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 50,000 |
| மொத்தம் | 30,00,000 |

i) நடப்பு விகிதம் ii) விரைவு விகிதம் கணக்கிடுக

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com CamScanner